**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT MUNSIF, TENKASI.**

O.S.No.99/2021

Deposition of witness for PW1

| | | |
|---|---|---|
| Name | : | சங்கரப்பாண்டியன் |
| Father's Name | : | அய்யாத்துரை |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | 73 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 12.09.2025.

முதல் விசாரணை:

நான் இந்த வழக்கில் வாதி. என்னுடைய முதல் விசாரணைக்காக நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். இந்த நிரூபண வாக்குமூலம் என்னுடைய தகவலின் அடிப்படையிலேயே தயார் செய்யப்பட்டுள்ளது. நிரூபண வாக்குமூலத்தை படித்துப்பார்த்து உண்மை என உறுதி கூறி கையொப்பம் செய்துள்ளேன்.

1. 25.03.1989 தேதியிட்ட வாதிக்கு 1ம் தபசில் சொத்தைப் பொறுத்து தென்காசி தனி வட்டாட்சியர் அவர்கள் நத்தம் நிலவரித்திட்டத்தின் கீழ் பட்டா எண்.5 மூலம் வழங்கிய பட்டா அசல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 2016-2017, 14.03.2018, 14.03.2019, 26.11.2019 ஆகிய தேதிகளில் பிராது 1ம் தபசில் சொத்திற்கு அய்யாத்துரை தேவர் பெயரில் வாதியின் மகள் சாந்தி செலுத்திய தீர்வை ரசீதுகள் (எண்ணம்-4) அசல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 08.02.2015, 30.11.2016, 27.03.2018, 27.03.2019, 26.11.2019 ஆகிய தேதிகளில் பிராது 1ம் தபசில் சொத்திற்கு அய்யாத்துரை தேவர் பெயரில் வாதியின் மகள் சாந்தி செலுத்திய குடிநீர் கட்டண ரசீதுகள் (எண்ணம்–5) அசல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 1982, 23.06.2011, 20.06.2012, 20.12.2012, 29.06.2013, 23.04.2015, 27.08.2015, 23.10.2015, 25.02.2015, 19.10.2016, 19.12.2016, 19.08.2016, 23.02.2016, 20.02.2017, 16.08.2017, 19.12.2017, 19.06.2017, 20.02.2019 ஆகிய தேதிகளில் பிராது 1ம் தபசில் சொத்திற்கு வாதி செலுத்திய மின்கட்டண ரசீதுகள் (எண்ணம்–18) அசல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. வாதி 1ம் தபசில் சொத்தில் வசிக்கிறார் என்பதற்காக மண்டல துணை வட்டாட்சியரால் வழங்கப்பட்ட வசிப்பிட சான்று இணையவழி நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. பிராது 2ம் தபசில் சொத்தை வாதியின் தந்தை அய்யாத்துரை தேவர் கிரையம் வாங்கியதை காட்டும் கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. 25.03.1989 தேதியிட்ட வாதியின் தாயார் பார்வதிக்கு நத்தம் நிலவரித்திட்டம் மூலம் தென்காசி வட்டாட்சியர் வழங்கிய பட்டா அசல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. வாதி குடும்பத்தின் கொடிவழி ஜாபிதா வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய முதல் விசாரணை தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.